THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 1st February 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

1. *Obituary Reference re Demise of King Mahendra of* ***Nepal.***

MR. CHAIRMAN : I have to inform the House, with deep regret, of the sudden demise of King Mahendra of Nepal yesterday India valued his friendship and the close ties which he had established with our country. Under his guidance, Nepal has made great progress in all fields. India has close trade, cultural and friendly relations with Nepal.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, all the hon. Members stood in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

MR. CHAIRMAN : Questions 76 to 80 are postponed.

Lalit Kala Academy

*81 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to revive the Lalit Kala Academy in the State; and

(*b*) if so, the details thereof?

லளித கலா அகாடமி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் "லளித கலா அகாடமி"யை மீண்டும் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் ஏதும் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) &(இ) தற்போது செயல்படாமல் நின்று விட்ட லளித கலா அகாடமியை (கவின் கலைக் கழகம்) மீண்டும் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை. இருப்பினும், புதிய

[1st February 1972

விதிகளுடன் கலைகள், கைவினைப் பணிகள் மேம்பாட்டிற்கென்றே புதிய அமைப்பு ஒன்றினை தனிப்பட ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. விவரங்கள் இன்னும் இறுதியாகத் தயாரிக்கப்படவில்லை. விரைவில் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

Medium of Instruction

*82. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the **Minister for Education and Local Administration be pleased to** state—

(a) the location of Government Colleges in Tamil Nadu where facilities exist in the P.U.C. and the Degree courses for study both in Tamil and English medium; and

(*b*) the location of colleges where such facilities do not exist and the courses for which such facilities do not exist?

பயிற்சி மொழி.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு பயிற்று மொழிகளிலும் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு படிப்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ள அரசுக் கல்லூரிகள் எந்தெந்த இடங்களிலுள்ளன ?

(இ) அத்தகைய வசதிகள் இல்லாத கல்லூரிகள் அமைந்துள்ள இடங்கள் யாவை ? எந்தெந்த பாடமுறைகளுக்கு அத்தகைய வசதிகள் இல்லை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ் பயிற்று மொழி வகுப்புக்கு வசதி செய்யப்பட்டிருந்த அரசு கல்லூரிகள் எல்லாவற்றிலும் ஆங்கிலப்பயிற்று மொழிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ் பயிற்று மொழி வகுப்புக்கள் மட்டுமே நடத்தி ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்கள் நடத்துவதற்கு வசதி இல்லாத அரசுக் கல்லூரி ஒன்றுகூட கிடையாது. புவியியல், சமூகஇயல் போன்ற சில சிறப்பான பாடங்களைத் தவிர மற்ற பாடங்களில் தமிழில் பயிற்சியளிக்க தமிழ் பயிற்றுமொழி வகுப்புக்கள் எல்லாக் கல்லூரிகளிலும் உள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சில கல்லூரிகளிலே இடவசதியின்மை காரணமாக இரண்டு வகுப்புகளையும் நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. உதாரணமாக தஞ்சையில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரியில் இடம் இல்லாத காரணத்தால், மரத்தடியில் வகுப்புகளை நடத்திவருகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 93 அல்லது 96 கல்லூரிகளில் போன வருஷம் திடீரென்று அவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இட நெருக்கடி தீரும் வகையில் ஆங்காங்கு கட்டடம் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றது. தஞ்சை மகளிர் கல்லூரியைப் பொறுத்த வரையில், என்ன நிலை என்று தெரியவில்லை. ஆனாலும் இடவசதி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.